60

2] வருஷச்சந்தா ரூ. 1 8 0. [ஸஞ்சிகை 10

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ||

# 'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)



பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது.
1936-ஞு அக்டோபர்-மீ [ஐப்பசி-மீ

TL
O2 ma11, N3SSS
N36·2 70

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍 𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥
𑌶𑍍𑌰𑍀𑌯𑌦𑍁𑌗𑌿𑌰𑌿𑌨𑌾𑌯𑌕𑌾𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

# ॥ 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌬𑍋𑌧𑌿𑌨𑍀 ॥

# (தத்துவபோதிநீ).

𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌮𑍁𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑍍𑌯 𑌗𑍁𑌰𑍁𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌮𑍍 ॥
𑌯𑌾𑌦𑌵𑌾𑌦𑍍𑌰𑌿𑌨𑌿𑌵𑌾𑌸𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑌰𑌮𑍍 ॥
[illegible] 𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌹𑍍𑌵𑌯𑌃 ।
[illegible] ॥
𑌸𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌕𑌰𑍁𑌣𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌵𑌿𑌷𑌯𑌃 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌕𑍃𑌤𑌿𑌮𑍍 ।
[illegible] ॥
[illegible] ।
𑌕𑍃𑌪𑌯𑍈𑌵 𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌸𑍇𑌯𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌗𑍋𑌚𑌰𑌃 ॥

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்காசாரியர் சில வருஷங்களுக்கு முன் ஒரு கிரந்தம் செய்து வெளியிட்டார். அதற்கு பாதுகாஸஹஸ்ராவதாரதத்துவம் என்று பெயர். அதில் 16, 17, 18 பக்கங்களில் ஒரு ப்ரஸங்கத்தைக் கொண்டுவிட்டுக்கொண்டு, ஒரு விஷயம் எழுதியிருக்கிறார். அதாவது— நயனாச்சான் பிள்ளை என்கிற ஆசாரியராலே செய்யப்பட்ட த்வயார்த்தவிவரணபரமான ஓர் க்ரந்தத்தில் "இப்பதத்தில் த்விவசனம் ஸத்விதீயமிவ்வுபாயமென்கிற ஸாஹஸவசநத்தைத் தள்ளுகிறது. அவனும் அவளும் கூடி உபாயம் என்னில், சரணங்களிரண்டென்ன வொண்ணாது, நாலென்ன வேணும். இவ்விருவரும் ஸமப்ரதானரென்னில், அவளும் தனியே உபாயமாய் அவனும் தனியே உபாயமாய் விசிஷ்டமுபாய

184894

மென்னும் [அர்த்]தத்தை விரோதிக்கும். ஆகையாலே அவளுக்குப் புருஷகாரபாவமும், அவனுக்கு உபாயபாவமும் வ்யவஸ்திதமாயேயிருக்கும்" என்று வாக்கியங்கள் காணப்படுகின்றன. இவைகளின் அர்த்தத்தைத்தான் ஸ்ரீதேசிகன் ஸ்ரீரஹஸ்யத்ரயஸாரத்தில் த்வயாதிகாரத்தில்,

" ஶரணாகதிநிஷ்டஸ்ய பத்நீவைஶிஷ்ட்யபாயக: |
இதி சேந்நேஷ்டம் ப்ராப்தம் ஶ்ரீமச்சப்தவிரோதத: ||
ஸம்பந்தஸாமர்த்யத: ப்ராப்தம் வைஶிஷ்ட்யம் ப்ரயுஜ்யதாம் |
விஶேஷ்யஶரணத்வம் ந ஹி பாதிதுமர்ஹதி ||
ஶரணாநீதி வக்தவ்யமிதி யச்ச ப்ரஸஜ்யதாம் |
த்ருஷ்டேஷ்டாவஹாஸ்யம் தத்த்வப்ராயாந்யதோஷயா: ||
ந ஸம்ராஜ்ஞீ ஸபத்நீகே ஸசிவீயோகஸாஹஸம் |
தயோருக்த்யபார்த்யஸ்ய உதிதம் ஶாஸ்த்ரஸாஹஸம் || "

என்கிற ச்லோகங்களாலே தூஷித்திருக்கிறார். ஆனால் க்ரந்தகாரருடைய அபிப்ராயத்தைச் சரியாக அறியாமல் த்வயத்தில் பிராட்டிக்குமுபாயத்வம் விவக்ஷிதமாகில் " ஸ்ரீமந்நாராயணசரணௌ " என்றிப்படி பஹுவசனாந்தமாக இருக்கவேண்டும் என்று க்ரந்தகாரர் அபிப்பிராயப்பட்டதாகக் கருதி தூஷித்திருக்கிறார். க்ரந்தத்திற்கு அப்படி அபிப்ராயமன்று. பிராட்டிக்குமுபாயத்வம் விவக்ஷிதமாகில் "ஸ்ரீ நாராயணசரணௌ" என்றிருக்கவேண்டுமென்றே அபிப்பிராயம். சில ஆசார்யர்கள் " ஸ்ரீமந்நாராயணசரணம் " என்று ஏகவசனாந்தமாகவிருந்தாலும் ஜாத்யேகவசனாந்தமாகக் கொண்டு நாலு சரணங்களைக் கொள்ளலாமாகையாலே பிராட்டிக்கும் உபாயத்வம் அங்கீகரிக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டார்கள். ஒருவரும் பிராட்டிக்குமுபாயத்வம் விவக்ஷிதமாகில் 'ஸ்ரீமந்நாராயண சரணௌ' என்றிருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படவில்லை. ஆகையால் இப்படி தூஷித்தது சரியன்று-என்பதே.

சில வருஷங்கள் கழித்து மறுபடியும் மற்றொரு க்ரந்தம் செய்து வெளியிட்டார். அக்கிரந்தத்திற்கு " பக்ஷாவிலோசன பாவப்ரகாசிகை " என்று பெயர். அக்கிரந்தத்திலும் 9,10, 11, 12 பக்கங்களில் அதே விஷயத்தை எழுதியிருக்கிறார். தேசிக



னுடைய கிரந்தங்களில் தம்முடைய பூர்வாசாரியர்கள் ஸூக்தி விஷயமாகச்சொல்லியிருக்கும் தூஷணங்கள் முழுவதும் ஸ்வாநுஷ்ட்டித நிவாரணங்களேயொழிய ஒரு தூஷணமாவது சரியானதன்று. அதற்கு ஒன்றை உதாரணமாகக் காட்டுகிறேன் என்று சொல்லிவிட்டு, முன்குறித்த விஷயத்தையே எழுதியிருக்கிறார்.........மூன்று ரஹஸ்யங்களுக்குள் ஒன்றான த்வயத்தினுடைய முதல் வாக்யத்தில் முதற்பதத்தில் இருக்கும் த்விவசனத்தை வியாக்யானிக்கும் பூர்வாசார்யர்கள் ஒரே முகமாக த்விவசனத்தாலே உபாயபூர்த்தி சொல்லப்படுகிறது என்று ஸாதிக்கிறார்கள். அப்படியே பிள்ளை லோகாசார்யரும் முமுக்ஷுப்படி என்கிற க்ரந்தத்தில் "சரணௌ" என்கிற வித்தாலே உபாய பூர்த்தி சொல்லப்படுகிறது என்று ஸாதிக்கிறார். இதற்கு வியாக்யானம் செய்கிற மணவாளமாமுனிகள் "த்விவசனம் இரண்டுக்கு மேல் மற்றொன்று புகுர ஸஹியாமையாலே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயபூர்த்தி சொல்லுகிறதென்கை" என்றுஸாதித்திருக்கிறார்.........இதற்குத் தாத்பர்யமாவது லோகத்தில் ஏகவசனம் ஏகத்வத்தைப்போல் பகுத்வத்தையும் சில வழிகளாலே சொல்லச் சக்தியுடையது. அப்படியே பஹுவசனமும் பகுத்வத்தைப்போலே ஏகத்வத்தையும் சில வழிகளாலே சொல்லச் சக்தியுடையது. த்விவசனமோவென்றால் அப்படிப்பட்டதன்று. எந்தக் காலத்திலும் எந்த விதத்தாலும் த்வித்வமென்கிற ஸங்கியையோடு கூடின வஸ்துக்களையே சொல்லும். இது சாஸ்திரம் போகும் வழி. இந்த அர்த்தத்தைத் தான் நயனாசார்ச்சான் பிள்ளை தம்முடைய க்ரந்தத்தில் இன்னும் விசதமாக ஸாதித்திருக்கிறார் என்றிவை முதலிய விஷயங்கள் இரண்டாவது க்ரந்தத்தில் உள்ளன. ஆக இரண்டு க்ரந்தங்களாலும் ஆச்சான் பிள்ளை க்ரந்தத்திற்கு பிராட்டிக்கு உபாயத்வம் விவக்ஷிதமாகில் த்வயத்தில் "ஸ்ரீநாராயணசரணௌ" என்றிருக்கவேண்டும் என்றே அபிப்பிராயம். " ஸ்ரீமந்நாராயண சரணௌ " என்று இருக்கவேண்டுமென்கிற அபிப்பிராயம் அடியோடு கிடையாது என்று அண்ணங்கராசாரியர் தீர்மானித்ததாக ஏற்பட்டது.

இவ்விடத்தில் மத்தியஸ்தரான பண்டிதர்கள் எல்லோரையும் முன் எடுத்துக்காட்டிய மணவாளமாமுனிகளின் ஸூக்தியையும், அதற்கு அண்ணங்கராசாரியர் அபிப்பிராயம் வர்ணித்

த்தையும், அவரெடுத்துக் காட்டிய ஆச்சான்பிள்ளை ஸூக்தியையும், அதற்கு அவரபிப்பிராயம் வர்ணித்ததையும் நன்றாக மனதில்வைத்துக்கொண்டு, நாம் மேல்சொல்லப்போகிற விஷயங்களை ஸாவதானமாகப் பார்க்கவேண்டுமென்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த விஷயத்தில் அண்ணங்கராசாரியர் தீர்மானித்தது அடியோடு பொருந்ாது. இவர் தீர்மானித்த அர்த்தத்தை இவரெடுத்துக்காட்டிய ஸூக்திகளிரண்டும் ஒருகாலும் சொல்லா. அந்த ஸூக்திகளுக்கு பிராட்டிக்கு உபாயத்வம் விவக்ஷிதமாகில் "ஸ்ரீமந்நாராயண சரணௌ" என்றே இருக்கவேண்டும் என்கிற தாத்பர்யம்தான் பொருந்துமென்றும், ஆகவே ஸ்ரீதேசிகன் நான்கு ச்லோகங்களாலே அதைத்தூஷித்தது மிகவும் பொருத்தமுடையதே என்றும் நிரூபிப்பதற்காக தர்க்கார்ணவம், பண்டிதரத்னம், தர்க்கசிரோமணி,உத்தமூர் ஸ்ரீ-உ-வே-வீரராகவாசாரியர் இப்பொழுது ஒரு க்ரந்தம் செய்து வெளியிட்டிருக்கிறார். அதற்கு 'வசனக்ருத்ய விமர்சம்' என்று பெயர். அக்க்ரந்தம் 22 பக்கங்களடங்கியது. அதற்குக்கண்டனம் என்று எண்ணி அண்ணங்கராசாரியர் ஒரு க்ரந்தம் செய்து இப்பொழுது வெளியிட்டிருக்கிறார். இதற்கு 'ஸதாசார்ய ஸூக்தி ரக்ஷா' என்று பெயர். இந்த க்ரந்தம் முகவுரை உள்பட 72-பக்கங்களடங்கியது. இந்தக் க்ரந்தத்தில் எழுதியிருக்கும் விஷயங்கள் முழுதும் பொருத்தமற்றவைகள் என்று நிரூபிப்பதற்காக நாம் இக் க்ரந்தத்தை எழுதுகிறோம். இது ப்ரதிஜ்ஞாமாத்திரமென்று மத்தியஸ்தர்கள் நினைக்கவேண்டாம். ஒவ்வொரு விஷயங்களையும் நன்றாக ஊன்றிப் பார்க்கில் உண்மை விளங்கும்.

நாம் இதுவரையில் இவர் க்ரந்தங்களில் ஒன்றுக்காவது கண்டனம் எழுதினதில்லை. இனி எழுதப்போவதுமில்லை. இக்ரந்தமொன்றுக்கே இப்பொழுது கண்டனம் எழுதப் புகுந்தோம். இதற்குக் காரணம் யாதெனில், முதலாக வெளிவந்தஇவர் க்ரந்தத்தை நாம் பார்த்ததும், இவர் க்ரந்தம் முழுவதும் இவ்விதமாகத்தானிருக்கும் என்று நமக்குண்டான நிச்சயமும், நாலும் இரண்டும் கூடினால் ஆறு என்று ஒருவன்சொன்னால், ஏழுஎன்று ஸாதிப்பதற்கு மற்றொருவன் எவ்வளவு க்ரந்தமெழுதினாலும் அது எப்படி அவனுக்கு சக்யமாகாதோ, அப்படியே இவர்முன்



காட்டிய இரண்டு கிரந்தங்களிலும் இப்பொழுதுவெளியிட்ட ரக்ஷா க்ரந்தத்திலும் சொல்லிய விஷயங்கள் ஸாதுக்களென்று ஸாதிப்பது அடியோடு சக்யமாகாது. ஆகையால் இவ்விஷயத்தில் இனி க்ரந்தமெழுதுவது அனாவச்யகமேஎன்கிறதினாலும், 'இந்த ஒருக்ரந்தத்தினுடைய உண்மையான ரீதி வெளியானால் முன்பின்க்ரந்தங்களின்ரீதியும் நன்றாக வெளியாகும். இக்ரந்தமொன்றிலேயே அவசியம் நிரூபணீயங்களான வெகு விஷயங்கள் உள்ளன. அவர் க்ரந்தங்களுக்குள் இதொன்றே முக்கியமானது' என்று நம்முடையதீர்மானமும். இவ்விதமாகவே அவரும் ஒரு ஸமயம் ஏதாவது ஒன்று எழுதிவிடலாம். ஆனதுபற்றியே நாம் அவருடைய பூதபவிஷ்யத்வர்த்தமான க்ரந்தங்களையும், நம்முடைய இக்ரந்தத்தையும் ஒரே ஸமயத்தில் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு விஷயங்களையும் குறிப்பிடப்போகிற அவர் க்ரந்தங்களுடைய அந்தந்தப் பக்கங்களில் ஸாவதானமாகப்பார்த்து உண்மையையறிய வேண்டுமென்று மத்தியஸ்த பண்டிதர்களை அடிக்கடி ப்ரார்த்திக்கிறோம். இனி விஷயங்களை விசாரிக்கத் தொடங்குவோம்.

ரக்ஷாக்ரந்தத்தில் முகவுரை முதல் பக்கத்தில் "வீரராகவாசாரியர் பிராட்டியின் உபாயத்வவிஷயத்தில் ஸ்ரீதேசிகனுடைய ஸித்தாந்தம் இன்னது என்பதை ஸ்பஷ்டமாக நிரூபித்துக் காட்டவில்லை" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இது ஸரியன்று— வீரராகவாசாரியர், வசனக்ருத்யவிமர்சம் என்கிற தம்முடைய க்ரந்தத்தில் 10, 11-பக்கங்களில் "அவளுக்கும் அவனுக்குப்போல் சரணவரணக்ரியாஸம்பந்தம் கிடையாது. அப்படியாகில் சரணஸம்பந்தம் ஸ்ரீக்குச் சொல்லவேண்டும். ஆக விசேஷ்ய சரணத்வவிசிஷ்டத்தையே இது சொல்லுகிறது என்பது அநுபபந்நம். ஏவஞ்ச ஸ்ரீமந்நாராயணசரணௌ என்று பஹுவசநாந்தமாக இருக்கவேணுமென்கிற ஆக்ஷேபத்தை மூன்றாவது காரிகையால் பரிஹரிக்கிறார்" என்கிற அவதாரிகையாலும், "விசேஷணத்திலும் க்ரியாந்வயஸம்பவ்யாஹ்ருத வஷாய-ஸம்பவாஸம் வாக்யஸ்வாரஸ்யஸித்தம், இதற்கு விசேஷபாதகமிராதபோது இதை அழிக்கலாகாது.......... ஆக சரணவரணவிஷயத்வம் பிராட்டிக்குமுண்டு........ஆகையால் ஸ்ரீசரணத்தையும் சரணமாகப் பற்றுவது மந்த்ரதாத்பர்ய

"விஷயம்தான்" என்கிற மேல் வாக்யங்களாலும் ஸ்ரீ தேசிகனுடைய காரிகாவியாக்யானப்ரகரணத்தில் நாராயணனுக்குப்போலே பிராட்டிக்கும் ஸாக்ஷாத் மோக்ஷார்த்தமாக சரணவரணகர்மத்வரூபமான உபாயத்வமுண்டென்று ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளத்தை ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்கிறார்.

இதற்குமேல் முகவுரையில் "வீரராகவாசாரியர் விமர்சத்தில் 21-வது பக்கத்தில் பிராட்டியின் உபாயத்துவத்தைப்பற்றி ஸ்ரீதேசிகன் ஒன்றும் ஸாதிக்கவில்லை. ஸ்ரீக்கு விசேஷணத்வத்தை ஸ்தாபித்து விட்டால் பிறகு யதாப்ரமாணம் உபாயத்வம் எவ்வளவு தூரம் போய் நிற்குமென்பதை அவரவர்களே தெரிந்து கொள்ளட்டுமென்று ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளம் என்று எழுதியிருக்கிறார். இவர் அபிப்பிராயப்படிக்கு ஸ்ரீயின் உபாயத்வம் ஊசலாடிக்கொண்டிருக்கிறதென்றே விளங்குகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

விமர்சத்தில் 21-வது பக்கத்திலோ "ஆகையால் பிராட்டிக்கு அசக்திக்குக் காரணம் யாதொன்றும் இல்லையாகையாலும், பகவானுக்குப்போலே ஸ்வீகார ஸங்கல்பாதிகளுக்குத் தடை சொல்ல யாதொரு ப்ரமாணமும் இல்லையாகையாலும் அஸங்கோசேந இருவருக்கும் துல்யோபாயத்வமுண்டென்பது மற்றொரு பக்ஷம். ஸ்ரீதேசிகனும் ஸர்வபூர்வாசார்ய ஸம்மதமான விசேஷணத்வத்தை 'சரணௌ' என்கிற த்விவசநத்தைக் கொண்டு தள்ளுகிறவர்களுடைய பக்ஷத்தை நிராஸம் செய்து, சரணசப்தார்த்தசோதனமும் செய்துவிட்டால் பிறகு யதாப்ரமாணம் உபாயத்வம் எவ்வளவு தூரம் போய் நிற்குமென்பதை எளிதில் அறிந்துகொள்ளலாமென்று அப்பக்ஷத்தை விரிவாக நிராகரித்தருளினார்" என்கிற வாக்கியங்கள் உள்ளன. இதில் மற்றொரு பக்ஷமென்பது யாருடைய பக்ஷம்? அப்பக்ஷத்தில் பிராட்டியின் உபாயத்வவிஷயத்தில் என்ன அர்த்தஸ்திதி ஏற்படுகிறது? எளிதில் தெரிந்துகொள்ளலாமென்பதற்கு எதை எவ்விதமாகத் தெரிந்துகொள்ளலாமென்று அர்த்தம்? அவரவர்களென்று எங்கேயிருக்கிறது? எளிதில் தெரிந்துகொள்ளலாமென்று சொன்னால் உபாயத்வத்திற்கு ஊசலாடுதல் எப்படி ஏற்படுகிறது? ஆக இப்படி அநுவதிக்கது அடியோடு பிசகுடன் பொய்யுமாம்.



இரண்டாவது பக்கத்தில் "வீரராகவாசாரியர் ஸ்ரீக்கு உபாயத்வம் விவக்ஷிதமாகில் 'ஸ்ரீமந்நாராயண சரணுந்' என்றே இருக்கவேண்டுமென்று ஆச்சான்பிள்ளையின் அபிப்ராயமென்று ஸ்தாபிப்பதில் பெருமுயற்சி செய்யவில்லை" என்று எழுதியிருக்கிறார். பூர்வபக்ஷிகளை வெகுவிதமாக தூஷித்தால்தான் பெருமுயற்சி செய்ததாகுமென்பது இவர் அபிப்பிராயம் போலும். வ்ருதாவான தூஷணாதிகளால் விஷயம் வாராது என்கிற உண்மையையறிந்த வீரராகவாசாரியர் சிறிதும் தூஷணம் செய்யாமல் விஷயத்தை மாத்திரம் மிகவும் நன்றாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

விமர்சக்ரந்தத்தில் 5-வது பக்கத்தில் "இவ்விடத்தில் இப்பதமென்பதாலே 'ஸ்ரீமந்நாராயண சரணௌ' என்கிற பதத்தை க்ரஹித்திருக்கிறார் என்பதில் ஸந்தேஹமேயில்லை. இங்கு த்விவசனம் ஸ்ரீக்கு உபாயத்வ வ்யவச்சேதகம் என்று சொல்லுகிறார் என்பதும் நிர்வாதம்" என்றும், 8-வது பக்கத்தில் "அவர் கருத்தாவது விசிஷ்டஸ்தலமான இவ்விடத்தில் விசேஷணத்திலும் க்ரியாந்வயம் விவக்ஷிதமாய் பிராட்டியுமுபாயமென்னில் அப்போது சரணசப்தார்த்தத்தில் நாராயணனுக்குப் போலே ஸ்ரீக்கும் அந்வயம் சொல்லவேண்டும். ஆக இருவருடைய சரணங்களும் சேர்ந்து நாலாகையாலே த்விவசநம் அஸங்கதமாகிறது என்று" என்றும், 12-வது பக்கத்தில் "இவ்வளவால் 'ஸ்ரீமந்நாராயணசரணுந்' என்று ஆபாதனமே ஆச்சான்பிள்ளைக்கு அபிமதமென்பது அவருடைய பிரதம வாக்கியத்தாலேயே ஸ்பஷ்டமென்பதும்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு "இவ்விடத்தில் ........... ஸந்தேஹமே இல்லை" என்கிற ஒரு வாக்கியமே ஆச்சான்பிள்ளைக்கு 'ஸ்ரீமந்நாராயண சரணுந்' என்பதே ஆபாத்யமாக அபிப்ரேதம். வேறுவிதமாக ஒருகாலும் கொள்ளமுடியாது என்பதைத் திடமாகக் காட்ட சக்தி உடையதன்றோ? இவ்வாக்கியத்தின் அர்த்தத்தை இவரே தம்முடைய ரக்ஷாக்ரந்தத்தில் 30-வது பக்கத்தில் "ஆச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியில் இப்பதத்தில் த்விவசனமென்று உபக்ரமமாகையாலே 'ஸ்ரீமந்நாராயணசரணௌ' என்கிற பதமே அவருக்கு விவக்ஷிதமாதலால் மதுப்பை அவர் விட்டுவிட்டே

ஆபாதனம் பண்ணுகிறுரென்கை சேராது என்று பிறர் எழுதுவது அவிம்ருஷ்டரமணீயம்” என்று அநுவதித்திருக்கிறுரே? இதைவிட எப்படிச் சொல்லலாம்?

இதற்குத் தூஷணமாக “இப்பதத்திலென்று தொடங்கியுள்ள வாக்யம் வேறு. இரண்டென்னவொண்ணுது நாலென்ன வேணும் என்பதோடுகூடிய வாக்யம் வேறு” என்று அவ்விடத்திலெழுதியதும் பொருந்தாது. இரண்டென்ன வொண்ணுது என்கிற அம்சத்தைச் சிறிது விசாரிப்போம். எந்த விடத்தில் சரணங்கள் இரண்டென்று சொல்லியிருப்பதை ஆச்சான்பிள்ளை ஒண்ணுது என்று தடுக்கிறுர் என்று பராமர்சித்தால்; த்வயத்தில் சரணௌ என்று சொல்லியிருப்பதை என்றே விளங்கும். ஸ்ரீ நாராயண சரணௌ என்றுவது நாராயண சரணௌ என்றுவது கேவலம் சரணௌ என்றுவது எங்கேயோ சிலவிடத்தில் இருப்பதாகக் கருதி அதைத் தடுக்க த்வயவிவரண ப்ரகரணத்தில் ஆச்சான்பிள்ளை ஆரம்பித்தாரென்று சொல்வது ஒருபடியாலும் சக்யமாகாதன்றே? ஒண்ணுது என்று எங்குள்ளதைத் தடுக்கிறுர் என்கிற விசாரமே இங்கு முக்யம். ஆகையால் அண்ணங்கராசாரியருக்கு இப்பதத்திலென்கிற பதம் எந்தவாக்யத்திலிருந்தாலென்ன? எப்படிக்கும் இந்த விசாரம் த்வயத்திலிருக்கும் த்விவசன விஷயமென்பதில் ஸந்தேஹிக்கக் கொஞ்சமும் வழி இல்லையே?

இங்கு இந்த விஷயம் அறியத்தக்கது— “இப்பதத்தில் த்விவசனம் ஸத்விதீயம் இவ்வுபாயமென்கிற ஸாஹஸ வசனத்தைத் தள்ளுகிறது. அவனும் அவளும்கூடி உபாயமென்னில் சரணங்களிரண்டென்ன ஒண்ணுது. நாலென்னவேணும்” என்பது ஆச்சான்பிள்ளை ஸூக்தி என்று இவரே எடுத்துக்காட்டியிருக்கிறுர். இந்த வாக்யங்களில் ஒவ்வொரு பதத்தையும் ஊன்றிப்பார்க்க வேண்டும். இப்பதத்திலென்பதற்கு ‘ஸ்ரீமந் நாராயண சரணௌ’ என்கிற பதத்தில் என்று அர்த்தமென்பதை இவரே ஒப்புக்கொண்டிருக்கிறுர். இங்கு த்விவசனம் ஸாஹஸ வசனத்தை எப்படித் தள்ளுகிறது என்பதை விசாரிக்கவேண்டும். பிராட்டிக்கு உபாயத்வத்தில் பர்யவஸிக்கக்கூடியதான சேரச்சொல்லப்பட்ட க்ரியாதிகளையுடையவளாக விருக்கையாகிற விசேஷணத்வத்தைக் கொள்ளில் இத் த்விவசனம் அநுபபன்னமாய்முடியுமாகில் இது ஸாஹஸவசனத்தைத் தள்ளுகிறது என்று சொல்லக்கூடும். அநுபபத்தியோ த்விவசனத்திற்கு ஒருகாலும் சொல்லமுடியாது. ஸ்ரீக்கு உபாயத்வம் கொள்ளில் சரணசப்தம் அவளுடைய சரணங்களையும் சொல்லுமென்று வைத்துக்கொண்டு அநுபபத்தி சொல்லுகிறதா? அவளுக்கு உபாயத்வமிருந்தாலும் மதுப் இருக்கையாலே சரண சப்தம் நாராயணனுடைய சரணங்களை மாத்திரம்தான் சொல்லுமென்று வைத்துக்கொண்டு அநுபபத்தி சொல்லுகிறதா? முதல் பக்ஷத்தில் ‘ஸ்ரீநாராயண சரணௌ’ என்கிற விடத்தில் போலே ‘ஸ்ரீமந்நாராயண சரணௌ’ என்கிற விடத்திலும் “ஸ்த நாரீ நாரம் அிக்ஷாவிஷ்ணு ஜாதிः ப்ராயேண” என்கிற வாமநஸூத்ராதிகள்படியே த்விவசனத்தாலேயே பஹு அர்த்தத்தைத் தெரிவிக்கலாமாகையாலே த்விவசனத்திற்கு அநுபபத்தி சொல்லமுடியாது. இரண்டாவது பக்ஷத்தில் த்விவசனமேயிருக்கவேணுமாகையாலே அடியோடு அநுபபத்தி சொல்லமுடியாது. ஆகையால் இந்த த்விவசனம் ஸ்ரீக்கு உபாயத்வத்தை எப்படித் தள்ளும்? அநுபபத்தியில்லாவிடிலும் தள்ளுமென்னில் ப்ரபத்யே என்கிற விடத்தில் ஏகவசனமும் உபாயத்வத்தைத் தள்ளலாம். கிம் வஹுநா? நாராயணய இத்யாதி பதங்களும் தள்ளலாம். அவனும் அவளும் கூடி என்கிற வாக்கியத்திலும் “சரணங்களிரண்டென்ன வொண்ணுது நாலென்ன வேணும்” என்பது எப்படிப் பொருந்தும்? இவ்வாக்யத்தில் இப்பதத்திலென்கிற பதம் வாராவிடிலும் ஸ்ரீநாராயணர்களுடைய பிரஸ்தாவமிருப்பதாலே “ஸ்ரீநாராயணசரணௌ, ஸ்ரீநாராயணயோஶ்சரணௌ, ஸ்ரியோ நாராயணஸ்ய ச சரணௌ, ஸ்ரீஸஹிதோ நாராயணஸ்ய சரணௌ, ஸ்ரீஸஹநாராயணசரணௌ” என்கிற ஐந்து ஸ்தலங்களுக்குள் ஒரு ஸ்தலத்தில் பஹுவசநாபத்தி பண்ணப்படுகிறதாக அவசியமொப்புக்கொள்ள வேண்டும். இவைகளில் முதல் மூன்று ஸ்தலங்களை ஒரு கூறுகவும் கடைசி இரண்டு ஸ்தலங்களை ஒரு கூறுகவும் கொள்ளலாம். முதல் மூன்று ஸ்தலங்களிலோ “ஸ்த நாரீ நாரு” என்கிற வாமன ஸூத்திரத்தாலும் அதற்கிணங்கிய மஹாகவிப்ரயோகங்களாலும் மீமாம்ஸா நியர்யவிசேஷத்தாலும் த்விவசனத்திற்கே பஹுத்வத்தை அர்த்தமாக தாராளமாகக் கொள்ளலாமாகையாலே “இரண்டென்ன ஒண்ணுது” என்பது அடியோடு சேராது. இது

விஷயத்தை இவரே ரக்ஷாக்ரந்தத்தில் 35ம் பக்கத்தில் "த்வயத்தில் ஸ்ரீநாராயணசரணௌ என்றோ ஸ்ரீநாராயணயோ: சரணௌ என்றோ இருந்து அது பஹுவசனாந்தமாகத்தானிருக்கவேண்டு மென்று யாராவது ஆபாதனம் செய்திருந்தால் அவர்களை வாய் மாளச்செய்ய இந்த வாமன ஸ்தோத்ராதிகள் உபகரிக்கும்" என்று எழுதியிருக்கிறார். ஆக பரிசேஷந்யாயத்தாலே உத்தவ்விஶிஷ்ட மாயும் இதுவரை படிக்கப்பட்டு வருவதுமாகிய 'ஸ்ரீமந்நாராயண சரணௌ' என்கிற ஐந்தாவது ஸ்தலத்தில்தான் பஹுவசனாபாதனம் பண்ணப்பட்டிருப்பதாகக் கொள்ளவேண்டும். இந்த ரக்ஷாகாரரோ "இப்பதத்திலென்பது" இரண்டாவது வாக்கியத்தில் இல்லை என்கிறார். வெகு வருஷங்களுக்கு முன்பே ஆச்சான் பிள்ளைக்கு ஸ்ரீமந்நாராயண சரணௌ என்கிற ஆபாதன சரீரத்திலே அடியோடு தாத்பர்யமில்லை. ஸ்ரீநாராயண சரணௌ என்கிற ஆபாதன சரீரத்திலேயே தாத்பர்யமென்று இரண்டு க்ரந்தங்களில் யெழுதியிருக்கிறாரென்பதை முன்பே சொன்னோம்.

இங்கு நம்முடைய ஒரு கேள்வி. அதாவது:— "இரண்டென்ன ஒண்ணுது" என்பது எந்த வாக்யத்தில் பொருந்துமோ அந்த வாக்யத்தை இதுதானென்று எடுத்துக்காட்டவேண்டும் என்பதே. இவர் அந்த வாக்ய விசேஷத்தைக் காட்டியேதீர வேண்டும். இவருடைய ரீதியினாலே த்வயத்தினருகிலும் போகக் கூடாது. அப்படிப்போனாலும் மதுப் இருந்தாலும் சரணபதம் ஸ்ரீயினுடைய சரணங்களையும் சொல்லுமென்கிற பக்ஷத்திலும் சொல்லாது என்கிற பக்ஷத்திலும் இவரிஷ்டம் நிறைவேறாது. இருக்கும் த்விவசனத்திற்கு ஒருவிதமான தோஷமும் சொல்ல முடியாதாகையாலே என்பதை சற்று முன்பே சொன்னோம். ஆகையால் முன்னெடுத்துக் காட்டிய ஆச்சான்பிள்ளையின் வாக்யத்திற்கும் அத்தோடு துல்யமான "த்விவசனம் இரண்டுக்கு மேல் மற்றொன்று புகுர ஸஹியாமையாலே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாயபூர்த்தி சொல்லுகிறதென்கை" என்கிற மணவாளமாமுனிகளுடைய ஸூக்திக்கும் ஒருவிதமான அர்த்தத்தைச் சொல்லித் தலைக்கட்டவேண்டியது இவருடைய கடமையாயிருக்கிறது. இதுவே ப்ரக்ருதம் முக்யமான விஷயம். இது விஷயத்தை இவர் ஸ்தாபித்த பிறகுதான் ரக்ஷாக்ரந்தத்தில் 19-வது பக்கத்தில் "த்விவசனம் இரண்டிற்குமேல்பட்ட மற்றொன்று



புகுர ஸஹியாமையாலே என்கிற ஸ்ரீஸூக்தியும் அதற்கு நம்முடைய விவரணமும் க்ஷுத்ரஜ்ரும்பித நவவேதாந்த்யாபாஸ நிரபேக்ஷ நஸூதர்களின் ஹ்ருதவிஜ்ரும்பித வாக்விலாஸங்களாலே அசைக்கவும் போகாது" என்று இவர் எழுதியது ஜீவிக்கும் என்பதை இவர் திடமாக எண்ணியிருக்கவேண்டும்.

ஆக இவ்வளவால் இப்பதத்திலென்கிற ஸூக்திக்கு ஜாத்கவாதிவாக்யதுல்யத்வம் வாராமைக்காக பிராட்டிக்குமுபாயத்வம் கொள்ளில் சரணசப்தம் ஸ்ரீயின் சரணங்களையும் அவசியம் சொல்லவேண்டுமாகையாலே த்வயத்தில் ஸ்ரீமந்நாராயண சரணௌ என்று இப்படி பஹுவசனாந்தமாகவேதானிருக்கவேண்டும். த்விவசனாந்தமாயிருக்கக்கூடாது என்றே ஆச்சான்பிள்ளைக்கும் அபிப்பிராயம் கொள்ளவேண்டுமாகையாலே ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் ஆச்சான்பிள்ளைஸ்வாமி மதுப்பு இருக்கும்போது சரணசப்தம் ஸ்ரீயின் சரணங்களை ஒருகாலும் சொல்லாது என்கிற அம்சத்தையும், அப்படிச் சொன்னாலும் 'ஸ்தநாஶீநாம் ஶிக்ஷாவிஷா ஜாதி: ப்ராயேண' என்று இவை முதலிய ப்ரமாண நியாயங்களாலே த்விவசனமே நாலு சரணங்களையும் சொல்லக்கூடுமென்கிற அம்சத்தையும் அறியாமைமாலே "இரண்டென்னவொண்ணுது நாலென்னவேணும்" என்று ஸாதித்திருக்கிறார் என்று திருவுள்ளம் பற்றி "ஶரணாகதி வக்தவ்யமிதி யத் வ்யவஸிதம் । ஶ்ருத்யுக்தேஸ்ஸ்வரவஹாஸ்யம் தத் ப்ராயாந்யதோஷயாத்" என்று வஜ்ரவைபவயிதமான தூஷணத்தையருளிச்செய்தார் என்று தீர்ந்தது.

இரண்டாவது பக்கத்திலேயே "காரிகாதர்ப்பணத்தில் 'ஸ்ரீநாராயணசரணௌ' என்று ஆபாத்ய சரீரத்தை ஸ்பஷ்டமாகவே எடுத்துக்காட்டியிருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது,

இதுவும் அடியோடு பொருந்தாது. அங்குள்ள பங்க்தியாவது— "வஸ்துதஸ்து ஶரோகஸ்ய வாயகக்வாஹிதம் வாயகமேவ ந ஸவதீத்யாஹ ஶரணாது—கயாதிதி। கண்யா யுக்: — ஶரணாதிதி நிஷேத்யஸ்யாக விஶிஷ்டவிவக்ஷாயாமிதி யக ப்ரஸஜ்ஜிதம் ஶுவாதிதழ, தக ஶ்ருத்யுக்தேஸ்ஸ்வரவஹாஸ்யம்। வதிப்ராயாந்யதோஷயாக ஶரணாந்யேவ ந வத்வா: ப்ரா

யா_ந்ருெ தாzஙயஃ, வ_த்ருாஸூ விஶேஷணெகௌ_நாஙயஃ, ஸ்ஃ ஷூாயாநெ்ருநொஹெயாவி_ுவக்ஷாயா ஏவ ஹி ‘ ஸ்ரீநாராயண உாரணௌ ’ ஐதி வக்தவ்யூ । விஶேஷண_தயாz_ந்ருதாஸ்ருா ஷூாயா_ந்ருவிவக்ஷாயா ஜூ ஷூயா நஹ ஒதவிஶேஷ்ருஉாரணஇ ஸ்ரோஷாஒெயவ தயா நிஷெ_ுமாஸ । ஃ_ந்ருயா ஒக்ஷணவிஶி ஷெ_ா ஶாஜேஹஜ்ுஸூமத ஐ_த்ருதூ வாக்யவ_நம் ந ஸ்ருாஸ ஐதி” என்பது. இந்த பங்க்திக்கு என்ன அர்த்தமென்று விசாரிக்க வேண்டும். கீழ் ‘ ஸ்ரீஜேஉவிரோய தஃ ’ என்றும், ‘ ஶவெ ஷூாஸதஃ ’ என்றும், த்விவசநத்திற்கு ஸ்ரீயின் விசேஷண த்வத்தைப் பாதிக்க யோக்யதை உள்ளதாகக் கொண்டு, உபக்ர மாதிகரண ந்யாயத்தாலே முதலில் சொல்லப்பட்ட விசேஷணத் வம் ப்ரபலமாகையாலே அதை முடிவிலிருக்கும் துர்பலமான த்விவசனம் பாதிக்காது என்று சொல்லப்பட்டது. வாஸ்தவத் தில் த்விவசனத்திற்கு அதை பாதிக்க யோக்யதையே கிடை யாது. ஸ்ரீக்குமுபாயத்வம் கொள்ளில் பஹுவசனம் வரவேண் டியிருந்து அது வாராமல் த்விவசனம் வந்திருந்ததாகில் இந்த த்வி வசனத்திற்கு விசேஷணத்வத்தைப் பாதிக்க சக்தி உண்டென்று ஒப்புக்கொண்டு அந்த பாயத்தை விலக்க ந்யாயத்தைக்கொள் வது ஆவச்யகமாகும். இவ்விடத்திலோ ஸ்ரீக்கு உபாயத்வத் தைக் காட்டக்கூடிய விசேஷணத்வமிருந்தாலும் சரணசப்தம் விசேஷ்யமான நாராயணனுடைய சரணங்களையே சொல்லவேண் டிய நிர்ப்பந்தமுள்ளதாகையாலே பஹுவசனத்திற்கு ப்ரஸக் தியே இல்லாமையாலே விசேஷணத்வத்தை பாதிக்கச் சக்தி யற்றதாகவே த்விவசனம் நிற்கிறது. ஆகையால் இங்கு ந்யாய ஸஞ்சாரம் அநாவச்யகம். ஸ்ரீக்கு அப்ராதாந்யத்தை விவக்ஷித்து அதற்கனுகுணமான மதுப் என்றும் ப்ரத்யயத்தை ப்ரயோகித் திருக்கும்போது சரணசப்தம் ஸ்ரீயின் சரணங்களை ஒருகாலும் சொல்லாதாகையாலே பஹுவசனத்திற்கு ப்ரஸக்தி இல்லையா கையாலே ஸ்ரீக்குமுபாயத்வம் கொள்ளில் பஹுவசனமிருக்க வேண்டும் என்கிற ப்ரஸங்கம் அஸங்கதமேயாகும். இருவருக் கும் துல்யமாக ப்ராதாந்யத்தையே விவக்ஷித்து அதற்கு அநு குணமாக மதுப் ப்ரத்தியயம் ஸஹசப்தம் முதலியவைகளை ப்ர யோகியாமல் இரண்டு பதங்களுக்கும் த்வந்த்வ ஸமாஸத்தைக்கொண் டால் அப்போது சரணசப்தம் ஸ்ரீயின் சரணங்களையும் சொல்



லக்கூடிய சக்தி உள்ளதாகையாலே பஹுவசனம் வரவேண்டும் என்று ஆபத்தி பண்ணலாம். ஆக மதுப் முதலியவைகளில்லா மலிருக்கும் த்வந்த்வஸமாஸத்தில் பண்ணக்கூடிய பஹுவசனா பத்தியை மதுப்பிருந்து விசேஷணவிசேஷ்யபாவம் தோன்று மிடத்தில் பண்ணினது அடியோடு பொருந்தாது. இப்படியிசை யாமல் விசேஷணவிசேஷ்யபாவம் தோன்றுமிடத்திலும் வாஸ் தவத்தில் விசேஷ்யத்துக்குப்போலே விசேஷணத்திற்கும் சேரச் சொல்லப்பட்ட க்ரியாதிகளுண்டாகில் த்வந்த்வஸமாஸத்தில் போலே வசனாதிகள் வரவேணுமென்று கொள்ளில் ஒக்ஷண விஶிஷெ_ா ஶாஜேஸூமதஃ என்கிறவிடத்திலும் ஸூமதௌ என்று த்விவசநம் வர ப்ரஸங்கிக்கும். ஆகையால் விவக்ஷாதீனமாக சப்தப்ரயோகம் பண்ணும்போது ஒன்றுக்குச் சாப்தமாக விசே ஷணத்வம் சொல்லில் அவ்விடத்தில் விசேஷ்யத்தை அநுஸ ரித்தே லிங்கவசனாதிகள் வருமென்று எல்லோருமிசையவேண் டியதால் த்வயத்தில் பஹுவசநாபத்தி அடியோடு பொருந்தாது என்கிற அர்த்தம் இந்த காரிகாதர்ப்பணவாக்யங்களுக்கு ஸ்பஷ்ட மாகத் தோன்றவில்லையா? இவ்விடத்தில் “ ஃ_ந்ருயா ஒக்ஷண விஶிஷெ_ா ஶாஜேஹஜ்ு ஸூமத ஐ_த்ருதூ வாக்யவ_நம் ந ஸ்ருாஸ” என்கிற வாக்யத்தை முக்யமாகக் கவனிக்கவேண்டும். இங்குள்ள ‘ ஸ்ரீநாராயண சரணௌ ’ என்பதை இவர் தமக்கு அநுகூலமாக எடுத்தது கொஞ்சமாவது பொருந்துமா? இது “ பச்ய சகுந்தலாவண்யம் ” என்றால் ‘ க்வ மே அம்பா ’ என்று கேட்ட தோடு துல்யமாகாதா? இருவருக்கும் ஸம்ப்ராதான்யவிவக்ஷை யைக் காட்டும் ஸமயத்தில் மதுப் ப்ரத்யயத்தோடு கூட எப்படி எடுக்கமுடியும்? ஆகையாலேயன்றோ மதுப் இல்லாமல் எடுத்துக் காட்டியது. “ த்வயத்தில் ஸ்ரீக்கும் உபாயத்வமுண்டாகில் ஸ்ரீ நாராயண சரணௌ என்று இருக்கவேண்டுமென்று நீங்கள் சொல் லுவது சரியல்ல” என்றன்றோ இவருக்கு அபிமதமான அர்த்தம் வேறுவிதமானால், வதிஷூாயா_ந்ருெதாzஙயாஸ– “வ_த்ருாஸூ விஶேஷணெகௌ_நாஙயஃ, ஃ_ந்ரு_தாஸ்ருா ஷூாயா_ந்ருவிவக்ஷா யாம் து, ஃ_ந்ருயா ” என்கிற இந்த வாக்யங்களுக்கு என்ன அர்த்தம் சொல்லுகிறது. இந்த ரக்ஷாகாரரே அதைச் சொல்லித் தலைக்கட்டவேண்டும். ‘ சரணாவிதி வக்தவ்யம் ’ என்கிற ச்லோ கத்திற்கு இவர் சொல்லுகிற வியாக்யான தாத்பர்யத்தை அநு

ஸரித்துத் தாத்பர்யம் சொல்லவேணுமாகையாலே "ஸ்ரீதேசிகன் ஸ்ரீமந் நாராயண சரணௌ என்று ஆபாதனம் பண்ணினதாக ப்ரமித்துத் தூஷித்திருக்கிறார்" என்று இவர் பாதுகாஸஹஸ்ராவதார தத்வத்திலும் ரக்ஷாவிலோசன பாவப்ரகாசிகையிலும் மிகவும் ஸம்ப்ரமத்தோடு சொல்லியிருப்பது எப்படிப் பொருந்துமென்று விமர்சஹ்ருதயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

முகவுரையில் இரண்டாவது பக்கத்திலும் க்ரந்தத்தில் 44,45 பக்கங்களிலும் ஸ்ரீஸாரஸ்வாதினியில்'[illegible]'என்று ஸாதித்திருப்பதைப் பற்றி மிகவும் தூஷித்திருக்கிறார். 'ஸாமாத்யோ ராஜா'என்பதற்கும், ஸ்ரீமந்நாராயண சரணௌ என்கிற பதத்திற்கும் அதிகமான வைஷம்யமுண்டு என்பதை ப்ரகிருதி ப்ரத்யயார்த்தாக்வயக்ரமங்களைக்காட்டி உபபாதிக்கிறார். 'ஸ்ரீமந்நாராயண: ப்ரபத்தவ்யௌ என்று ப்ரயோகிக்கக்கூடாது—என்று ஸாரஸ்வாதினீகாருடைய நிஷ்க்ருஷ்டமான தாத்பர்யமேற்படுகிறது. அப்படி யார் ப்ரயோகிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள்? என்றும் 45-வது பக்கத்திலெழுதியிருக்கிறார்.

இவ்விடத்தில் ஸ்ரீஸாரஸ்வாதினியில் எவ்விதமான வாக்யங்கள் இருக்கின்றன? இவர் அதற்கு என்ன அர்த்தத்தை க்ரஹித்திருக்கிறார்? என்பதை சிறிது விசாரிக்கவேண்டும். ஸ்ரீமந் நாராயண: ப்ரபத்தவ்யௌ என்று ப்ரயோகிக்கக்கூடாது என்கிற தாத்பர்யம் அந்த விடத்தில் ஏற்படுகிறதா? என்பதையும் விசாரிக்கவேண்டும். "[illegible]" என்பது ஸாரஸ்வாதினீவசனம். இதற்கு என்ன அர்த்தம்? [illegible]

[illegible] அப்படியே ஸ்ரீமந்நாராயண சரணௌ என்கிற இடத்திலும் பிராட்டிக்கு சாப்தப்ராதாந்யமும் நாராயணனுக்கு சாப்தப்ராதாந்யமும் தோன்ற மதுப்பிருப்பதாலே நாராயண சரணௌ என்கிற இடத்தில்போலே ஸ்ரீமந் நாராயணசரணௌ என்கிற இடத்திலும் வசனப்ரவிருத்தி விஷயத்தில் பிராட்டியைச் சொல்லப்படாதவளாகவே பாவித்து நாராயணசரணங்களிரண்டாகையாலே த்விவசனமே ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இருவருக்கும் ஸமப்ராதான்யம் தோன்றும்படி வாக்யஸன்னிவேசமிருந்தால் பஹுவசனப்ரஸக்தி உண்டு என்று இந்த ஸாரஸ்வாதினீஸூக்திக்கு நிஷ்க்ருஷ்டமான அர்த்தம் தோன்றவில்லையா? இப்படியிருக்க இங்கு ரக்ஷாகாரர் சாப்தபோதத்தை வர்ணித்து உபபாதித்த வைஷம்யம் எதற்குப் பிரயோஜகம்? 45-வது பக்கத்திலேயே "[illegible]" என்று ஸாரஸ்வாதினி முதலிய ஸ்ரீஸூக்திகளுக்கு பிருதமனித்திருக்கிறார்.

முகவுரையில் 4வது பக்கத்தில் "பிராட்டியும் தனியே உபாயம்தான் என்று சொல்லமாட்டாமல் விசிஷ்டமும்பாயமென்னே சொல்லிக்கொண்டிருக்குமவர்கள் வீணை வசனக்ருத்ய விமர்சம் செய்தது அபிமத ஸாதகமாகாது. இது ஸாரஸங்க்ஷேபம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் உபாயத்வத்தை எவ்வித மாகச் சொல்லுகிறார்கள்? பிராட்டிக்கு அப்ராதான்யமாவது என்ன? உபாயத்வமாவது என்ன? விசிஷ்டமுபாயமென் பதற்கு என்ன தாத்பர்யம்? ஸ்ரீக்கு தனித்து உபாயத்வமில்லை என்பதற்கு என்னபாவம்? என்று விமர்சிக்கப்புகுந்து ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகளையும் தத்வ்யாக்யாந ஸ்ரீஸூக்திகளையும் யதாக்ரம மாக ஸேவித்தால் இவ்விஷயங்களினுண்மை நன்கு விளங்கு மாகையாலே அப்படியிருக்குமதிகாரி விஷயத்தில் இந்த ஸாரஸங் க்ஷேபத்திற்கு வெகுமதிபெற அடியோடு அவகாசமில்லை.

ஸாக்ஷாந்மோக்ஷப்ரதான ஸங்கல்பாச்ரயத்வ மோக்ஷார்த்த பரஸ்வீகர்த்ருத்வ ஏததுபயாத்மகம் ப்ரக்ருதத்தில் உபாயத் வம். இப்படிப்பட்ட உபாயத்வம் பிராட்டி பகவான் இவர்களிரு வருக்கும் தனித்தனியே உண்டு. பிராட்டிக்கு இவ்வுபாயத்வம் அநுதி பகவதிச்சாஸித்தம். பகவானுடைய உபாயத்வமோ பிராட்டியின் இச்சாஸித்தமன்று. இதுதான் உபாயத்வத்தில் பேதம். இதையிட்டே பிராட்டிக்கு அப்ரதானோபாயத்வ வ்யபதேசம். விசிஷ்டமுபாயமென்பதற்கு ஒரு சேதனன் விஷயத்திலும் அவன் மாத்திரமாவது அவள் மாத்திரமாவது தனித்து மோக்ஷரூப பலப்ரதான ஸங்கல்பததர்த்த பரஸ்வீகாரங் களைப் பண்ணுகிறதில்லை என்று அபிப்பிராயம். உபாயத்வம் வ்யாஸஜ்ய வ்ருத்தி என்பதற்குமிதுவே தாத்பர்யம். உபாயத்வி த்வமில்லை என்பதற்கு பகவான் எப்படி அன்யேச்சானதீனமான உபயத்வமுடையவனோ அப்படி அன்யேச்சானதீனமான உபாயத்வமுடையதான இரண்டாவது வஸ்து கிடையாது. பிராட்டியோ வென்றால் அவனுடைய அநுதீச்சாஸித்தமான உபாயத்வமுடையவள் என்று தாத்பர்யம். பிராட்டிக்கு பதி பாரதந்திரியரூபமான அப்ரதான்யமாவது அவனுடைய இச்சா தீனமான ஸர்வவியாபாரங்களையும் உடையவளாக விருக்கையே. இந்தஅம்சம் எல்லாசேதனர்களுக்கும் துல்யமானாலும் இவளுக்கு மோக்ஷப்ரதான ஸங்கல்பாச்ரயத்வம் பரஸ்வீகர்த்ருத்வம் ஜகத் ஸர்காதி வியாபாரவத்த்வம். ஏகோனஸமஸ்தசேஷித்வம் என்று இவை முதலிய ஆகாரங்கள் அனந்யதாஸித்தப்ரமாணங்களாலே ஸித்திக்கையாலேஇதரசேதனரைக் காட்டிலும் வைலக்ஷண்யம் உண்டு.



பத்நீஸஹ த்வாரக யாமக த்வாரக ச, லக்ஷ்மீநாராயணாப்யாம் ஸமுத்தா ரணஹேதுக ச, ரக்ஷாபேக்ஷாஸஹிஷ்ணுஹேதுக ச என் கிற வ்யவஹாரம்போலே ஸ்ரீநாராயணன் ஆவஹித ஸாக்ஷா ந்மோக்ஷோபாயஹேதுக என்கிற வ்யவஹாரமும் ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவருக்கும் அபிமததமமே. ப்ரமாண ஸம்ப்ரதாயங்களாலே பிராட்டியின் உபாயத்வ விஷயத்தில் இவ் வர்த்தஸ்திதியை இசைந்திருக்குமவர்கள் விஷயத்தில், இவரு டைய முகவுரையில் 3, 4 பக்கங்களிலும், ரக்ஷாக்ரந்தத்தில் பல விடங்களிலும் உள்ளதான "பிராட்டிக்கு ப்ரதான உபாயத்வம் கொள்ளில் உபாயத்வித்வம் ப்ரஸங்கிக்கும். அப்ரதான உபாயத் வம் கொள்ளில் அது புருஷகாரத்வத்திலேமுடியும்". "விசிஷ்டமு பாய மென்றே தேசிக ஸூக்திகளிலுமேற்படுகிறது." "பிராட் டிக்குத் தனித்து உபாயத்வம் சொல்லவழியில்லை" என்று இவை முதலிய வாதங்கள் எப்படி ஸபலமாகும்? "ந ஸ்வதந்த்ரா" என் கிற காரிகார்த்தத்தையறிந்தால் எவ்விதமான உபாயத்வித்வம் அநிஷ்டமென்பது விளங்கும்.

இவர் ஸ்ரீதேசிகனுக்கே பகவானுக்குப்போலே பிராட்டிக்கு ஸாக்ஷாந்மோக்ஷோபாயத்வம் அனபிமதம் என்று ஸ்ரீதேசிக ஸூக்திகளைக்கொண்டே உபபாதிக்கிறார்.

இது மிகவும் விநோதமானது. இதற்குப் பதில் சொல்லு வதே அநாவசியகம். ஆகிலும், ஸ்ரீதேசிகன் ஸூக்திகளை அடி யோடு ஸேவியாதவர்களைக் குறித்து ஸங்க்ரஹமாக சில ஸூக்தி களை மாத்திரம் எடுத்துக்காட்டுகிறேன். "ஸர்வஸ்வீகாரஸஹி தம் ரக்ஷாஸங்கல்பபூர்வகம் | த்ரவ்யாதிக்ரியாஹேதும் ஹிரண்யஸ்ய விஶேஷணம் ||" என்பது ஸித்தோபாயசோதநாதி காரத்திலுள்ள ஒரு காரிகை. இதில் பூர்வார்த்தம் எதற்காக ப்ர வர்த்தித்தது? "ஸாத்யோபாய உபேயஸ்ய ஸாதனோபாதி வ த்வேஷேண | ஸ்வீக்ருத: ஸ்வீக்ருதஸம்பந்தி ஸ்ரீஸஹிதோஷவேக்ஷ்யதாம்" என்பது த்வயாதிகாரத்திலுள்ள காரிகை. "விஶேஷணவி ஶேஷேண வ்யாகாரத்வயஶாலிநா | விஶிஷ்டஸ்ய ஸ்வ ரூபஸ்ய ஸ்வோபாயத்வே ந விக்ரஹ: ||" என்பது ஸ்ரீநி க்ஷேபரக்ஷையிலுள்ள காரிகை. இந்தக் காரிகைகள் மூன்றை

ம், "யாவகாஷா தாவெ" என்கிற ச்லோகத்தில் சொன்ன ணை விபாகத்தின்படியே பும்ஸ்த்வ பித்ருத்வ ப்ரசாஸித்ருத்வாதிகளாலே ப்ரதாபோத்தரனாய் தண்டதரனாய் நிற்கிற ஈச்வரனைப்பற்ற இழிவார்க்கு ஸ்த்ரீத்வ மாத்ருத்வாதிகளாலே வந்த மார்தவ வாத்ஸல்யாதி குணாதிசயத்தாலே இவள் அவனைப்பற்ற மக்குப் புருஷகாரமாகையும் ஈச்வர ஸ்வாதந்திரிய நியதமென்று கொள்ளில் இப்படியே ஸஹதர்ம சாரிணியான இவளாலே விசிஷ்டனாய்க்கொண்டு சரண்யனாகையுமீச்வரஸ்வாதந்திரிய நியதமென்று கொண்டால் ஒரு ப்ரமாணத்திற்கும் விரோதமில்லை." என்கிற த்வயாதிகார ஸூக்தியையும் ஸங்க்ரஹருசிகளான அதிகாரிகள் அவசியம் ஸேவிப்பார்களாக.

ஸ்ரீதேசிகனுக்கு ஸ்ரீக்கும் பகவானுக்குப்போலே 'ஸாக்ஷாத் மோக்ஷோபாயத்வமிஷ்டந்தான். இதற்கு ப்ரமாணங்களு முள்ளன என்பதை உபபாதிக்க வெட்கப்படுகிறோம். ஸ்ரீதேசிகனுக்கு ப்ரபத்தியென்று கதத்வமான ஒரு உபாயவிசேஷம் அபிமதமேயன்று. ஸம்ப்ரதாயஸ்தோத்ரம் ப்ரபத்திக்கு அங்கமென்றே ஸ்ரீதேசிகன் திருவுள்ளம். ஸ்ரீபாஷ்யகாரருக்கு வாக்யாநுஸந்தாநத்தாலே மோக்ஷமென்றே திருவுள்ளம். பக்தியென்று கதத்வமாக ஒரு உபாயவிசேஷம் அபிமதமேயன்று என்று ஒருவர் சொல்லப்புகுந்தால் இதற்கு பதில் சொல்லப் புகுவாருமுண்டோ? க்ருஷ்ண! உனக்கு இப்படியுமொரு லீலையுண்டா? என்றன்றோ இருக்க ப்ராப்தம்.

இப்படிப்பட்ட அனன்யதாஸித்தங்களான பிராட்டிக்குப் புருஷகாரத்வத்தைக் காட்டில் வேறுபட்டதான மோக்ஷோபாயத்வத்தைப் பிரதிபாதிக்கிற ஸ்ரீஸூக்திகளை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரஸாரத்திலேயே பலவிடங்களில் காணலாம். இப்படியிருக்க ரகையில், 12-வது பக்கத்தில் "எம்பெருமானுக்குச் சொல்லுகிற சரணவரண கர்மீபாவம் அனன்ய ஸாமான்யம். அதில் கூறு கொள்ள யார்க்குமுரிமையில்லை என்பது விளங்கியே தீரும். இதனை ஸ்ரீதேசிக திவ்ய ஸ்ரீஸூக்திகளே நிலைநாட்டும்" என்றும், 27-வது பக்கத்தில் "ஸ்வாமி தேசிகனுக்கும் இவ்வளவே தான் விவக்ஷிதமென்று பல ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு நிலைநாட்டினோம். இன்னமும் பல காட்டுகிறோம்." என்றும் சொல்



லப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு பல ஸூக்திகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறது. இது விஷயம் எப்படியிருக்கிறது? முன் காட்டப்பட்ட த்வயாதிகார ஸ்ரீஸூக்தியில் அவளுக்கு புருஷகாரத்வத்தை இசையுமாப்போலே சரண்யத்வத்தை இசைந்தாலும் ஒரு ப்ரமாணமும் விரோதிக்காது என்று ஸுஸ்பஷ்டதரமாக அருளிச்செய்திருக்க, இவர் அநேகபக்கங்களில் வெகு ஸம்ப்ரமத்தோடு ஸ்ரீதேசிகனுக்கு பிராட்டியின் உபாயத்வம் அபிமதமேயன்று என்று எழுதுகிறாரே. இது ஸகல தேசிக ஸ்ரீஸூக்திகளின் அர்த்தத்தையதாவத்தாக அறியாததாலேயோ? அல்லது அறிந்திருந்தும் வஞ்சனையாலேயோ? நிச்சயமேற்படவில்லை. இப்படிப்பட்ட இவர் க்ரந்தத்திற்கு எவ்வளவு ப்ராமாண்யம் ஒப்புக்கொள்ளலாம்.

முகவுரையில் 5, 6 பக்கங்களில் ஸ்ரீமந்நாராயணசரணௌ என்கிறவிடத்தில் த்விவசனமென்கிற லிங்கத்தாலே வைசிஷ்ட்யத்தைச் சொல்லுகிற மதுப் ரூபமான ச்ருதிக்கு பாதம் சொல்வது நியாயமன்று என்பது சரியன்று. இவ்விடத்தில் லிங்கத்திற்கு பாதம் ஒப்புக்கொள்ளில் வையர்த்யமே வரும். ஸ்ரீக்கு உபாயத்வம் கொள்ளில் த்வித்வத்திற்கு உபபத்தி ஸம்பவியாதன்றோ? ஆகையாலே 'ஸநயஷுக்ஷ ஷூஷிஹ தாநாம் விப ரீதம் பலாபலம்' என்கிற நியாயத்தாலே இங்கு லிங்கத்திற்கு ப்ராபல்யமே ஒப்புக்கொள்ளவேண்டும். மீமாம்ஸகர்கள் "ஸப்தத³சாரத்நிர்வாஜபேயஸ்ய யூபோ ப⁴வதி" என்கிறவிடத்தில் ஸப்தத³சாரத்நித்வமென்கிற பரிமாணத்திற்கு க்ரியாரூபமான வாஜபேயமென்கிற யாகத்தில் ஸாக்ஷாத்தாக நிவேசம் ஸம்பவியாமையாலே ஆனர்த்தக்யம் வருகிறது என்று கொண்டு பரம்பரையாக ஸம்பந்தத்தை உபபாதித்து வாஜபேயஸ்ய என்கிறவிடத்தில் ஷஷ்டீரூபமான ச்ருதியையே கௌணமாக கல்பித்து வாக்யார்த்தத்தை வர்ணித்திருக்கிறார்கள். வாஜபேயஸம்பந்தியான பசுயாகத்திற்கு அங்கமான யூபமென்கிற த்ரவ்யத்தின் ஸம்பந்தியாகையாலே பரிமாணவிசேஷத்தை வாஜபேயஸம்பந்தி என்று விவக்ஷிக்கக் குறையில்லையன்றோ என்று. அப்படியே இங்கும் பிராட்டிக்கு உபாயத்வம் கொள்ளில் த்விவசனத்திற்கு ஆனர்த்தக்யம் வருகையாலே

அதற்கு பலத்தையே ஒப்புக்கொண்டு மதுப் ப்ரத்யயத்தையே உபலக்ஷணபரமாக நயிப்பிக்கவேண்டும்—என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இது அடியோடு பொருந்தாது. பூர்வமீமாம்ஸையில் மூன்றாவது அத்தியாயத்தில் முதல் பாதத்தில் 9-வது அதிகரணத்தில் ஸப்தத³ஶாரத்னி: என்கிற வாக்கியத்தை விசாரித்திருக்கிறார்கள். இவ்வாக்யார்த்தவிஷயத்தில் 'ஆனர்த²க்ய ப்ரதிஹதானாம்' என்கிற நியாயத்தைக் கொண்டுவருவதற்கு ஒருவிதமான காரணமுமில்லை. எந்த மீமாம்ஸகரும் எந்த க்ரந்தத்திலும் ஸப்தத³ஶாரத்னி: என்கிறவிடத்தில் இந்த நியாயத்தை எடுக்கவில்லை. எடுக்கவும் முடியாது.

அந்த அதிகரணத்தில், ஸப்தத³ஶாரத்னிகம் ப்ரகரணத்தாலும், ஆனர்த²க்யத்தாலும் வாஜபேயத்திற்கு அங்க³மென்று கொள்ளவேண்டும். க்ரியாரூபமான வாஜபேயத்தில் ஸப்தத³ஶாரத்னிகரூபமான பரிமாணம் நிவேசிக்காது என்னில், வாஜபேயமத்⁴யமான த்³ரவ்யத்தில் முதலில் நிவேசித்து பிறகு வாஜபேயத்தில் நிவேசிக்கட்டும்— என்று பூர்வபக்ஷம். ஸப்தத³ஶாரத்னிகம் ஸாமானாதி⁴கரண்யபலத்தாலே முதலில் யூபத்தில் ஸம்பந்தித்து பிறகு யூபத்³வாரா யூபமுள்ளதான பசுயாக³த்தில் ஸம்பந்தித்து இந்த பசுயாக³த்³வாரா ப்ரதா⁴னமான வாஜபேயத்தோடு ஸம்பந்திக்கிறது என்றே அங்கீகரிக்கவேண்டும். இல்லாவிடில் அடியோடு யூபபத³ச்ரவணத்திற்கு ஆனர்த²க்யமே வருகிறது. யூபபத³த்திற்குக் கிஞ்சித்தும் ஸம்பந்தமில்லாத த்³ரவ்யத்³வாரத்வாச்ரயணத்தைக்காட்டில் வ்யவஹிதான்வயம் தோஷமன்று. ப்ரகரணத்திற்கு இப்படிக்கும் விரோதமில்லை. வாஜபேயஸ்ய என்கிற ஷஷ்டிக்கு ஸம்பந்தமாத்ரமே அர்த²மாகையாலே அதற்கும் விரோதமில்லை. 'அயம் தே³வத³த்தஸ்ய நப்தா' என்கிற அர்த²த்திற்குப்போலே, வாஜபேயஸ்ய யூப: என்கிற அர்த²த்திற்கும் விரோதம் சொல்ல முடியாதன்றோ? வாஜபேயஸம்பந்தி பசுயாக³ஸம்பந்தி



யூபஸம்பந்திகம் ஸப்தத³ஶாரத்னிகத்திற்கு உள்ளதன்றோ? என்பது ஸித்³தா⁴ந்தம். இவ்வ்யுத்பத்தியில் 'ஆனர்த²க்யப்ரதி ஹதானாம்' என்கிற ந்யாயத்திற்கு இங்கு ப்ரவேசிக்க என்ன வழியுள்ளது? ச்ருதிலிங்க³வாக்யாதி³களாலே வாஸ்தவத்தில் து³ர்ப³லமான இந்த ப்ரகரணத்திற்கு இங்கு ப்ராப³ல்யத்தை அவலம்பித்து ஸித்³தா⁴ந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஸப்தத³ஶாரத்னிகம் என்பது ஒரு பதார்த்தம். அது ஸாத்⁴யரூபமான கர்மமன்று. பூர்வபக்ஷத்திலும் த்³ரவ்யத்திற்கே இந்த பரிமாணத்தை ஒப்புக்கொள்ளுகையாலே அதற்கு ஆனர்த²க்யமும் சொல்லமுடியாது. ஆகையாலே ஒரு பதார்த்தத்திற்கு ப்ரதா⁴னத்தைக் குறித்து ஸாக்ஷாத் அங்க³த்வம் கொள்ளில் அப் ப்ரகரணத்திலிருக்கும் ஏதாவது ஒரு வஸ்துவுக்கு ஆனர்த²க்யம் வருமாகில் ப்ரதா⁴னத்தின் அங்க³த்தைக் குறித்து அப்பதார்த்தத்திற்கு அங்க³த்வத்தை இசைந்து ப்ரதா⁴னத்தோடு பாரம்பர்யஸம்பந்த⁴த்தையே அங்கீகரித்து ஆனர்த²க்யத்தைப் பரிஹரிக்கவேண்டும் என்று இங்கு சிக்ஷிதமான ந்யாயம். இங்கு ஸப்தத³ஶாரத்னிகம் வஸ்து; ப்ரதா⁴னம் வாஜபேயம்; அங்க³ம் பசுயாக³ம்; ஆனர்த²க்யம் யூபபத³ச்ரவணத்திற்கு என்று ஒரு பக்ஷம். பசுயாகா³காரத்திற்கு என்று மற்றொரு பக்ஷம். ஸப்தத³ஶாரத்னிகத்திற்கு பூர்வபக்ஷத்திலும் ஸித்³தா⁴ந்தத்திலும் ஸாக்ஷாத்காரரீத்யா ஆனர்த²க்யம் சொல்லமுடியாது. ச்ருதிக்கு ப்ராப³ல்யத்தை இசைந்தால் ஸப்தத³ஶாரத்னிகரூபமான கர்மத்திற்கு க்ரியாயாமஸம்ப⁴வாத் ஆனர்த²க்யம் வருகிறது என்றன்றோ இவர் அபி⁴ப்ராயம். கிம் ப³ஹுனா இவ்விடத்தில் ஷஷ்டீச்ருதியை அவலம்பித்து பூர்வபக்ஷமும் வரவில்லை. கர்மத்தை அவலம்பித்து ஸித்³தா⁴ந்தம் செய்யப்படவுமில்லை. ஆகையால் அந்த ந்யாயத்தை இங்கு சொல்லமுடியாது. ஆகையால் இவ்விடத்தில் "ஆனர்த²க்யாத் தத³ங்கே³ஷு" என்கிற ந்யாயந்தான் ப்ரவர்த்திக்கிறது. இந்த நியாயம் வேறு. "ஆனர்த²க்யப்ரதிஹதானாம் — ப³லம்" என்கிற ந்யாயம் வேறு, அந்த ந்யாயத்தைக்கொண்டு மீமாம்ஸகர்கள்

" வஶா˜ஃவாகரோதி " " ய˜வெ வஶா˜ம் நியா˜ஞ்ஜீத" " வஶா˜ம் வயபூஜிகரோதி " என்றிவை முதலிய வஶா˜ய ஃபூங்கள் ஸ்தானப்ரமாணத்தைக் காட்டில் ஷ்ருகரண ஷ்ருஃா ணத்திற்கு ஶ்ரு˜திஶிஜெத்யாஷியாலே ஸிஃமான ப்ராபல்யத் தையவலம்பித்து ஜெ்யாதிஷெஃாயபூங்கள் என்று அங்கீகரிக் கில் ஜெ்யாதிஷெஃம் ஸொஃயாமமாகையாலே அதற்குப் பசுவில்லாமையாலே அவைகளுக்கு ஆநயபூக்யம் வருகிறது. ஆகையாலே ஃ˜பைபூஃமான ஷ்ராநஷ்ருஃணத்திற்கே ஆந யபூக்ய ஷ்ருதிஹதாநாம் விவரீதம் ஃஃாபஃம் என்கிற ந்யா யத்தாலே ப்ராபல்யத்தை இசைந்து இதனாலே அவைக ளுக்குவஶா˜யாமாயபூகவத்தையே அங்கீகரிக்கவேண்டுமென்று ஸஃவிஶெஷத்தில் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அப்படியே " கவம்ஹ்யெ ஷ்ருயஶொ ஃனோதா " என்கிற மந்த்ரத்திற்கு கதிஷ்ருகாஶநஸாஃயபூ்யா˜வெஶிஜ்த்திற்கு ஃளபைபூஃ்யத்தை யும் "யஃ்யவ்யந்யஷெவத்யஃ வஶா˜ரயா வ்யாஹெயெ்யஃனோ தாகாயபூா" என்கிற வாக்கியத்திற்கு ஷ்ராபஃ்யத்தையும் 'ஆநயபூக்யஷ்ருதிஹதாநாம்'என்கிற ந்யாயத்தாலே இசைந்து கதிஷொஃயாயபூகவத்தையே நிர்ணயித்திருக்கிறார்கள். இங்கு அந்த மந்த்ரத்திற்கு ஶிஜ்ஞாந˜ஶொயெநாந்யாயபூகெவ வா க்யாநயபூக்யம் ஸஷ்ஃிதி ॥

" ஸவபூக்ரு ஃ˜பைபூஃஸ்யாவி ஷ்ருஃணஸ்ய ஃாயெயதி கிஞ்சிஃநயபூகீ ஹவதி। தஶொ விவரீதொ ஃாயொயொஜயி தவ்யஃ " என்று ஃஃாபஃாயிகரணத்தில் வாக்யகாரரும் சொல்லியிருக்கிறார். கீழ்க்காட்டிய இரண்டு ஸ்தலங்களிலும்"ஆ நயபூக்யாதஃஜெ்ஷ˜" என்கிற ந்யாயத்திற்குப்ரஸக்தியில்லை. எந்தவிடத்தில்ஃ˜பைபூஃமான ஷ்ருஃணத்தைக்கொண்டாகிலும் ஆநயபூக்யத்தைப் பரிஹரிக்கமுடியாதோ அந்தவிடத்திலே தான் அந்த ந்யாயம் ப்ரவர்த்திக்கிறது. ஒரு பதார்த்தத் திற்கு ப்ரதாநத்தோடு ஸம்பந்தம் கொள்ளில் அப்பதார்த்தத் திற்கோ வேறு பதார்த்தத்துக்கோ ஆநயபூக்யம் ப்ரஸங்கிக்கு மானால் அதைப் பரிஹரிப்பதற்காக அந்த பதார்த்தத்திற்கு



189899

அதின் அங்கத்தோடு ஸம்பந்தத்தை [illegible] வேண்டும் என்று அந்த ந்யாயத்திற்கு அர்த்தம் என்று முன்பே சொன் னோம். "ஸவஃஶாரதிவபூஜவெயஸ்ய ய˜வொ ஹவதி" என்பது உதாஹரணம். இவ்விடத்தில் ஆறு ப்ரமாணங்களுக் குள் எந்த ப்ரமாணத்தைக் கொண்டும் ஆநயபூக்யத்தைப் பரிஹரிக்கமுடியாது. இந்த இரண்டு ந்யாயங்களுக்குமிப்படி விஷயவ்யவஸ்தையை மீமாம்ஸகர்களே வர்ணித்திருக்கிறார்கள். வஸ்˜ஸ்திதி இப்படியிருக்க "ஆநயபூக்யாதஃஜெ்ஷ˜" என் கிற ஸ˜ஶ்ருத்திலும் " ஆநயபூக்யஷ்ருதிஹதாநாம் விவரீ தம் ஃஃாபஃம் " என்கிற ந்யாயஶரீரத்திலும் ஆநயபூ க்யஶப்தமிருப்பதையும் அந்த அதிகரணத்தில் " ஸவஃஶா ரதிவபூஜவெயஸ்ய ய˜வொ ஹவதி " என்கிற வாக்யத்தை எடுத்திருப்பதையும் பார்த்துவிட்டு தாமாகவே ஆநயபூக்ய ஷ்ருதிஹதாநாம் என்கிற ந்யாயம் இவ்வாக்யத்தில் ஸஞ்சாரித மென்றும், அந்த ந்யாயந்தான் ஸ˜ஶ்ருத்தில் சொல்லப்பட் டிருக்கிறது என்றும் ஜ்ஹித்தும், ஆநயபூக்யம் ப்ரமாணங் களுக்குத்தான் என்று ஜ்ஹித்தும், ஸவஃஶாரதிஃ என்கிற விடத்தில் ஷஷ்ஃ்ஶ்ரு˜திக்கு ஸிஃாஹத்தில் ஃளபைபூஃ்யம் சொல்லப்பட்டிருப்பதாக ஜ்ஹித்தும், ஸவஃஶாரதிகமே ஶிஜ்மென்று ஜ்ஹித்தும், ஷஷ்ஃ்ஶ்ரு˜திக்கு ஸாக்ஷாத் ஸம்ப ந்த்ராகாஶ்ரயணெ இந்த ஶிஜ்ஃநயபூகமாகிறது என்று ஜ்ஹித்தும் உவொஃ்தத்தில் 5, 6 பக்கங்களில் இவரெழு திய வாக்யங்கள் ஸ˜தராம் அஸஜ்தங்களாய்த் தீர்ந்தன என்றறியவும். இவரிங்கு " ஶிஜஸ்ய ஃாயெzவி ந தஸ்யாந யபூக்யஃ- கிஞ்˜ அஷ்ருஃணெ்யவெ " என்று எழுதியிருக் கிறார். இதற்கு என்ன அர்த்தமென்று எந்த மீமாம்ஸகர் களைக் கேட்டாலும் தெரியவில்லை என்றே சொல்லுகிறார்கள். அயத்தில் அிவஶநஶிஜஸ்ய ஃாயெzவி ந தஸ்யாநயபூக்யம் கிஞ்˜ அஷ்ருஃணெ்யவெ என்று சொன்னால் என்ன பதில் அளிக்கப்போகிறாரோ தெரியவில்லை. " யத்ருஹி ஷ்ருஃவெந ஷ்ருஃணெந ஃாயஃ்யாநஃவி ஃ˜பைபூஃம் ஷ்ருஃணாநயபூக்யம்

[library stamp]



